டேப் I சைடு 2                                                                                  23.11.66

1, நாட்டு வலசு பெண்கள் சொல்லிய ஒப்பாரி பாட்டுகள்.

A.

1, காசால் பெருத்தவியோ திலசோலிக் காரருக

காசு பணஞ் செய்யாட்டி கனத்த நகை போடாட்டி

கண்ணஞ்சியா செஞ்சுகத்தே காங்க வந்தாலாகாதா

பணமால் பெருத்தவுகோ பலசோலிக் காரருகொ

நீங்க பணங்காசு செய்யாட்டி பருத்த நகை போடாட்டி

பாங்கியம்மாள் செஞ்சுகத்தே பாக்க வந்தாலாகாதா

மேலே பாட்டுச் சொல்லிய பெண்: "இன்னஞ் சொல்லனுதுங்களா?"

பிருந்தா. "ஆ.. சொல்லுங்கொ"

2, சங்கி வெட்டிச் சங்கொதுக்கி சாமிநதியுண்டு பண்ணி

சாமிநதிப் பந்தலிலே சிவமாகிப் போச்சு மின்னு

சிவத்துக் கொடையாளி சாந்த பொன்னுவங்கிருக்கோ

சிவத்தே யெடுக்கிவாமா தங்கத்தெருவோட்டுவாமா

ஊரொரு சொல்பேச்சோ உங்களுட ரோசினையோ

புங்கு வெட்டி புங்கொதுக்கி பூமிநதியுண்டு பண்ணி

பூமிநதி பந்தலிலே பொணமாகி போச்சு மின்னு

பொணத்துக் கொடையாளி பொருத்த பொன்னுவங்கிருக்கோ

இனி பொணத்தே யெடுக்கிவாமா பொன்தேருவோட்டுவாமா

ஊரொரு சொல்பேச்சோ உங்களுட வோசினையோ

## தாயாருக்கு சொல்லும் பாட்டு:

பெண்: B.

3, இன்னைக்கு தெக்கே மதுரையிலே
தென் மதுரை வீதியிலே

இனித் தேரு வருகுதின்னு இந்த தெக்கத்த
மல்லிகளோ தேருமேல் வந்திறங்கி

என்னட தேடுஞ் சொகமிருந்தா
தேடம்மாள் பக்கருந்தா

இந்த தெக்கத்த மல்லிகளே தேன் மொழிக்கே வேணுமின்னு

இங்கெ தேடிவச்சு மேல் வழிச்சு
தென்னரளி மேல் போத்தி

இன்னைக்கு இருந்துந்தடம் பாப்பா
திண்ணை மேல் பாப்பா

நான் தேன் மொழியும் போனடனே இந்த எட்டு

வெறகனஞ்சு ஏசுஞ்சிஎனமின்னு

என்னட தேடம்மாள் பாங்கியிந்தா
இந்த சித்திரப் பூ வாய்திறந்து சீமாட்டியின்னுட்டா
நான் சீதை மகிழ்ந்திருவே சிலநேரம் பூரிப்பே

என்னட தேடம்மா காரியத்தெ இந்த தெக்கெலமேல்
பள்ளி கொண்டு சீமைக்கும் பொய்யாச்சோ?
நான் சீதை மனஞ்செடிஞ்சு சீதையம்மாள் வாடியிட்டே

3.

வடக்கெ மதிரையிலே
இந்த வாழ் மதிரை வீதியிலே

இங்கொ வண்டி வருதுன்னு
அந்த வண்ணாரத மோடுகின்னு

அந்த வடக்கத்த மல்லிகளே
இந்த வண்டி மேல் வந்திறங்கி

என்னொடை வளத்துஞ் சுகமிருந்தா
வளத்தம்மாள் பக்கருந்தா

வாங்கி வெச்சு நீர் தெளிச்சு
வாழிலையே மேல் போத்தி

எனை வருக்ந்தடம் பாப்பா வாசனையுள் பாப்பா

நா வாமொழியும் போனடொனே
இனி பத்து வெறகனஞ்சு பதிஞ்சு சாணமின்னு

என்னட வளத்தம்மாள் பாங்கியிந்தா
இனி மல்லியப்பூ வாய் திறந்து மகராசி யென்னாட்டா

நாம் பாத்து மகிழ்ந்திருவெ பகிதேசமின்னுருவே?

என்னட வளத்தம்மாள் பாங்கியே அந்த வாழையிலைமேல் -
பள்ளி கொண்டு வனத்துக்கும் பொய்யனிச் சோ?

நானதுக்குங் இறவு செய்தே அருங்கிளியாள்
வாடியிட்டே

4.

முதல் பேப்பரில் பாடிய பெண்: A ஆக இருக்கலாம்?

4, கரூரு வீதியிலே கரூரு வீதியிலே
கப்பல் கடை யோரத்திலே கப்பல்க் கடை யோரத்திலே
கமுக மரொ லாயிரங்கோ கமுக மர லாயிரங்கோ
கமுகோ மரத் தடியோ கமுகோ மரத் தடியோ
கன்னி தனுச்சதோ கன்னீ தனுச்சதோ
கமுக மரொ லென்ன செய்யி கமுக மர லென்ன செய்யி
கருதாலமச்சபிடி கன்னியம்மா கேட்ட தடோ

சீரங்கத்து வீதியிலே சீரங்கத்து வீதியிலே
செம்புக் கடை யோரத்திலே
சிமுக மரொ லாயிரங்கோ
சிமுகோ மரத்தடியே சீதே தனிச்சதோ
சிமுக மரொ லென்ன செய்யி சிமுக மரொ லென்ன செய்யி
சிரு சீலமச்சபுடி சீதையம்மாள் கேட்ட வனோ

இது பிறந்தவனுக்கு சொல்லும் பாட்டு.

5. பாலா கடல் பொறப்பே பாலா கடல் பொறப்பே
பச்ச முள்ள நல் புறப்பே பச்சமுள்ள நல்ப் புறப்பே
பாலுங் கசந்த தென்ன பாலுங் கசந்த தென்னோ
பாங்கி மேல் கோப மென்ன பாங்கீமேல் கோப மென்னோ
தேனு கடல்ப்பொறப்பே தேனு கடல்ப் பொறப்பே
திட்ட முள்ள நல் பொறப்பே திட்ட முள்ள நல்ப் பொறப்பே

தேனுங் கசந்த தென்னே தேனுங் கசந்த தென்னே
சீதே மேல் சோக மென்ன சீதே மேல் சோக மென்னே

பிறந்தவளுக்கு சொல்லும் பாட்டு

6. முந்திரியும் பூப்பூக்கி முந்திரியும் பூப்பூக்கு
மொளகு மணி செண்டு கட்டு மொளகு மணி செண்டு கட்டு
மொதல் நாளும் பொம்புறந்தோ மொதல் நாளும் பொம்புறந்தோ
முத்துக் கொடி சீதைக்கித்தே முத்துக் கொடி சீதைக்கித்தே
மோசமில்லை யென்னிருந்தோ மோசமில்லை யென்னிருந்தோ
முந்திரியும் பூவுதிரோ மொளகு மணியும் பிஞ்சுதிரோ
மொத நாளும் பொம்புறந்தோ முத்துக் கொடி சீதைக்கித்தே
மோசம் வந்தா தீருலையே

கஸ்தூரியும் பூப்பூக்கி கஸ்தூரியும் பூப்பூக்கு
கடுக மணி செண்டு கட்டு கடுக மணி செண்டு கட்டு
கடைசி நாள் பொம்புறந்தோ கடைசி நாள் பொம்புறந்தோ
கண்மணியாள் தாவுக்குந்தா கண்மணியாள் தாவுக்குந்தே
கசுட்டமில்லை யென்னிருந்தோ கசுட்டமில்லை யென்னிருந்தோ
கஸ்தூரியும் பூவுதிரோ கடுகமணி பிஞ்சுதிரோ
கடைசி நாள் பொம்புறந்தோ கண்மணியாள் தாவுக்குந்தா
ஏது கசுட்டம் வந்தா தீருலையே

6.

7. கனிஞ்சோ பழமிருக்கோ கனிஞ்சோ பழமிருக்கோ
கன்றுங்கிப் பூவிருக்கோ கன்றுங்கி பூவிருக்கோ
கல்லா வரமணக்கி கல்வசதிக் கோட்டைக்கு
கசுட்டமில்லை யென்னிருந்தோ
கனிஞ்சோ பழமுதிரோ கன்றுங்கிப் பூவுதிரோ
கல்லா வரமணக்கி கசுட்டம் வந்தா தீருலையே

வெடிச்சோ பழமிருக்கோ வென்றுங்கி பூவிருக்கோ
வில்லா வரமணக்கி வில்வசயர் கோட்டைக்கு
விசனமில்லை யென்னிருந்தோ

வெடிச்சோ பழமுதிரோ வென்றுங்கிப் பூவுதிரோ
வில்லா வரமணக்கி வில்வசயர் கோட்டைக்கு
வெசனம் வந்தால் தீருலையே.

பெண்: C.

8. தேடம்மாள் இம்பியிலே தேடம்மாள் இம்பியிலே
நாஞ்சீதை பொறக்கையிலே இன்னைக்கிச் செடியாய்
தழஞ்சிருந்தா செண்டோடிப் பூத்திருந்தா
நம்ம செல்லியம்மன் பூசை செய்யும்
சிவகுருகலய்ய னெல்லா
இந்த செண்டு நம்ப வேணுமின்னு
சேத்தி யெடுப்பதுண்டு சிலபூசை செய்வதுண்டு

7.

என்னட தேடம்மாள் பொந்தியிலே
நாஞ் சீதை பொறந்து விட்டு செடுவை ரம்ப
வாங்கி வந்தே

என்னிட வளத்தம்மா பொந்தியிலே நான்
மயிலி பொறக்கையிலே
நான் மரமாய் குழஞ்சிருந்தா மட லோடிப் பூத்திருந்தா
இந்த மாரியம்மன் பூசை செய்யும்
மருக்கு கலய்ய வெல்லா
இந்த மடவு நம்ப வேனுமின்னு அவன்
வாரி யெடுப்பதுண்டு வகு பூசை செய்வதுண்டு

என்னடை வளத்தம்மாள் பொந்தியிலே
நா மயிலி பொறந்து விட்டு மனச் செடுவை வாங்கி
வந்தே

9. பிறந்தவனுக்கு சொல்லும் பாட்டு.

என்னிட தேனு கரிணுக இந்த திசை கரிணர் சாமிகளே
நீங்க தாலுக்கோர் வீதியிலே தனிச்சுக் கும்மி
ஆடி வந்தா
நாந் தங்கா லொருவி யெல்லா இனி தனிச் சொருவி
வாரான்னு
நீங்க தனிச்சுக் கும்மி நிருத்தி சரஸ்வதியாள்
துக்கங் கேட்டா
என்னட சாமி பொறப் போடை நான் சரஸ் வதியாள்
சொல்லி வந்தா
எங்க சாமி புறப்புகள்க்கு தங்க முத்துங் கண்ணீரு
தானே சரிஞ்சுகிகி

என்னட தேனு கரிணருந்தே இந்த தேங்கரிணர்
சாமியிருந்தா

போலுசார் வீதியிலே பொறுக்கும்மியாடி
வந்தா

நான் பொண்ணு லொருவியல்லா
பொருத் தொருவி வாரானு

இன்னைக்கு பொருத்துக் கும்மி நிருத்தி
பொண்ணு குறை கேட்டேடா

என்னட தேனு கரிணருட பொண்ணு குறை
சொல்லி வந்தா

இனி பொன்னு முத்துங் கண்ணீரு
பொறுத்து முகும் பூமியிலே

வெண்டு.

பெற்றோருக்கு சொல்லும் பாட்டு

10. திங்கோ கெழமையின்னே திங்கோ கெழமையின்னே

இங்கெ தீவாளி நோம்பியின்னு தீவாளி நோம்பியின்னு

எங்க தேடுஞ் சகங்க ளெல்லா தேடய்யஞ்சாமியெல்லா

இங்கெ சீதைக்கே காயிதங்கோ சீதைக்கே காயிதங்கோ

நீங்க சீக்கிரமா போட்டிருங்கோ சீக்கிரமா போட்டிருங்கோ

நாங்க காயிதத் தெக் கண்டொடனே காயிதத் தெக் கண்டொடனே

நீங்க சீதைய ராசரு சீதையுஞ் ராசரு

சேந்து புறப்பூட்டோ சேந்து புறப்பூட்டோ

நீங்க கேளுங்க சேதியின்னு கேளுங்க சேதியின்னு?

~~நீங்க தென்னு ஆயாற் பந்தலிலே தென்னு ஆயாள்~~
பந்தலிலே

9.

நீங்க திண்ணையெக் கோந்துகோ
திண்ணையெக் கோந்துகோ

இந்த திண்ணெ நெறஞ்சிருக்கு
திண்ணெ நெறஞ்சிருக்கு

தென்புரமாய் சாஞ்சிருக்கு தென்புரமாய்
சாஞ்சிருக்கு

நீங்க செல்லமுத்துந் தாவை யெல்லா
செல்ல முத்துந் தாவை யெல்லா

நீங்க தென்னெ மடலொடிச்சு
தென்னெ மடலொடிச்சு

நாஞ் செல்லக் கிளி உள் நொழைந்தா
செல்லக் கிளியுள் நொழைந்தா

தெருஞ் சுகங்க லெல்லா தேடய்யஞ்சாமியெல்லா

இங்கெ செல்லக்கிளி தாவை யெல்லா
செல்லக்கிளி தாவை யெல்லா

தென்ன மடலொதுக்கி செல்லக்கிளியுள் நொழைந்தா

அந்த தென்ன நெலச்சாயி தேடார் மொகஞ்
சுழிக்கு

நாங் ளெட்டுக்கொரு பந்தி வெச்சு
எட்டிக்கோர் பந்தி வெச்சு

ஏலம் வெளங்கிவந்தா ஏலம் வெளங்கி வந்தா

நீங்க இளநீரு வீசிவந்தா
இளநீரும் வீசி வந்தா

இனி எட்டுக்கோர் வஞ்சியரு வெட்டுக்கோர் வஞ்சியரு

ஏலோம் வெளங்கிறது ஏலம் வெளங்கிறது.

இனி இளநீரு வீசுரது இளநீரும் வீசுரது

ஏலக்கிளி வாருமின்னு ஏலக்கிளி வாருமின்னு

என்னட செருசூக்சுகா தூக்கமின்னு
அந்த சின்ன மகோ தங்கமின்னு

நாஞ் செம்பா வொசந்திருவே
செழிய புசமாயிருவே

நீங்க தேடுஞ்சுகங் கண்ணசுரோ
தேடுஞ் சுகங் கண்ண சுரோ

எங்க நெஞ்சால் பதறுச்சோ
நெஞ்சகத்தே துல்லுதிப்போ

இனி வெள்ளிக் கிழமையின்னு
வெள்ளிக்கிழமை யின்னு

இன்னைக்கு ஒ விசேஷ நாளுமின்னு
விசேஷ நாளுமின்னு

எங்க வளத்துஞ் சுகங்க ளெல்லா
வளத்தெய்யஞ் சாமியெல்லா

இங்கெ கன்னிக்கே காயிதங்கோ-
கன்னிக்கே காயிதங்கோ

நீங்க கண்டுசுணப் போட்டிருமோ
கண்டுசுணய் போட்டிருமோ

காயிதத்தைக் கண்டொடனே
காயிதத்தைக்கண்டொடனே
நாங்க கன்னியிராசேரு கன்னியிராசேரு
நாங்க கலந்து புறப்பூட்டோ கலந்து புறப்பூட்டோ
காரணஞ்செதியென்ன காராணஞ்செதியென்ன
நீங்க ஆவூஒலயெக்கோரந்தழுகோ
ஆவூஒலயெக்கோரந்தழுகோ

வாச நிறந்திருக்கு வாசோ நிறந்திருக்கு
இனிவடபுரமாய் சாஞ்சிருக்கு

இந்த வாழை மடலொதுக்கி வாழே மடலொதுக்கி
வண்ணக்கிளியுள் நொழஞ்சோ வண்ணக்கிளி
உள் நொழஞ்சோ

இனி வாழே மரஞ்சாயி என்னை வளத்தார்
கெஞ்சுழிக்கு

நாம் பத்துக்கோர் பந்தி வெச்சு
பத்துக்கோர் பந்தி வெச்சு
நாங்க பாலும் வெளங்கிவந்தா
பன்னீரும் வீசிவந்தா
இங்கெ பத்துக்கோர் பாங்கியரு
பத்துக்கோர் பாங்கியரு

பாலும் வெளங்கிறது பன்னீரும் வீசுறது
இங்கெ பச்சைக்கிளி வாருமின்னு
பச்செக்கிளி வாருமின்னு
என்னட வளத்துஞ்சுகங்கெ ளெல்லா
வளத்தய்யஞ்சாமியெல்லா

பாலும் வெளங் கிறது பன்னீரு வீசுரது

என்னட காசிப் பொஸ்ப்பிங்கோ
கடசிமகோ தங்கமின்னு

நாங் கரும்பா லொசந்திருவே
கரும்பு புசமாகிருவெ

என்னட
~~நங்க~~ வளத்துஞ்சுகங் கண்ணசரோ
வளத்துஞ்சுகங் கண்ணசரோ

எனக்கி பத்துதே ரோகமெல்லா பதறுதே நெஞ்சகிரோ

பக்கம் 12

பெண்: D ?
பெண் D பாடிய பாட்டு
11, சரியாக புரியவில்லை

11,

பொன்னாசி பொன்னமலை - - - - - - - - ?

புழுவு படிச்சு வந்தா பொஸ்தகங்க வாடி வந்தா

புத்தீஞ் சருச்சணரே பொய் சொல்லா வாஞ்சகமே

பூமிலெ நிருத்தி வெச்சு பொஸ்தகத்தே
வாங்கிவெச்சு

பொண்ணுகுத்தஞ் சொல்லி வந்தா

இன்னக்கு புதுவுந்திரியாமோ
பொஸ்த்தகங்க வாடுமோ

தங்கசி தங்கி மலே தமிழ் படிக்கும் நம்ம - - - ?

இங்கெ தமிழ் கிறிஞ்சி மேலிருந்து நீங்க
தமிழும் படிக்கீலே சஸ்த்திரங்கோ வாடையில்லெ

13.

நான் தங்கா துக்கஞ் சொல்லியிட்டா

இங்கெ தமிழே - - - ? சஸ்த்திரங்க லாகுமா

பெண்:யோக இருக்கலாம்.?

12.

கருங்கல்லுக் கட்டிடங்கோ
கருங்கல்லுக்கட்டிடங்கோ

கலையான்மல் கோவிரங்கோ கலையான்மல் கோவிலெங்கோ

நீங்க கலையாம கோவிலத்து கலையாமல் கோவிலத்து

கரிணர் முத்துந் தோங்கின்னு
கரிணர் முத்துந்தோங்கின்னு

நாங்க கண்ணகையாள் பாத்திருந்தோ
கண்ணகியாள் பாத்திருந்தோ

கண்ணகையாளறிஞ்சு தானல்
கண்ணகியாளறிஞ்சதானல்

கரிண முத்து ரத்தினத்தெ கரிணர் முத்து
ரத்தினத்தெ

கரடி வந்து ஏவுனது கரடி வந்து ஏவுனது

நாங்க காட்டுனெ பேத்துக்கு.? காட்டுன பேத்துக்கு?

நாங்க கானகத்தோர் பக்ஷியற்கு
கானகத்தோர் பக்ஷியற்கு

நாங்க கரிணர் முத்து ரத்தினத்தெ
இன்னைக்கி கனசேதஞ் செய்தமிப்போ

செங்கல்லு கட்டிடங்கோ
செங்கல்லுக் கட்டிடங்கோ

அந்த சிதராமல் கோவிரங்கோ
சிதராமல் கோவிரங்கோ

நீங்க சிதராமல் கோவிரத்து சிதராமல் கோவிரத்து

நாம தேடும் செம்ப மித்துந் தொங்குனது
செம்ப மித்துந் தொங்குனது

செம்பர் மித்து ரத்தினத்தே
செம்பர் மித்துரத்தினத்தே

சிங்கம் வந்து ராவுனது
சிங்கம் வந்து ராவுனது

நாங்க சீமெ நரிகளுக்கு செடியிலுள்ள
பக்ஷியற்கு

நாங்க சில சேதந் செய்த மிப்போ

---